மாலை முரசு

பக்கங்கள் 13+4

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | பங்குனி 01 சனிக்கிழமை 15.03.2025 | அதிர்வு 224

## அனுராதபுரம் வன்கொடுமை: பிரதான சந்தேகநபருக்கு 17 வரை விளக்கமறியல்!

அனுராதபுரம் போதனா வைத்திய சாலையில் பணியாற்றும் பெண் வைத் தியர் ஒருவர் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் 03▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# இசைப்பிரியாவுக்கு நீதி வேண்டும்!

## நாடாளுமன்றில் சாணக்கியன் எம்.பி. வலியுறுத்து

இறுதிப்போரில் இராணுவத்தினரால் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டுப் படுகொலை செய்யப்பட்ட இசைப்பிரியாவுக்கு நீதி வேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

“அனுராதபுரத்தில் 02▶




# தமிழ்க் காங்கிரஸ் கட்சியுடன் ஜனநாயகத் தமிழரசு கூட்டு!


## இன்று ஊடக மாநாட்டில் அறிவிப்பு

(எஸ். நிதர்ஷன்)

ஜனநாயகத் தமிழரசுக் கட்சி உள்ளிட்ட மேலும் சில கட்சிகள் மற்றும் அமைப்புகள் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடன் இணைந்துள்ளன எனவும், இந்தப் புதிய கூட்டு சைக்கிள் சின்னத்தில் எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலை எதிர்கொள்ளவுள்ளது எனவும் ஜனநாயகத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் கருணாகரன் நாவலன் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் இன்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார். 02▶



## மட்டக்களப்பில் ஆண் சிசுவின் சடலம் மீட்பு!

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு, சந்திவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மொறக்கொட்டாஞ்சேனையில் உள்ள காட்டுப் பகுதியில் இன்று சனிக்கிழமை காலை ஆண் சிசு ஒன்று சடலமாக மீட்கப்பட்டுள்ளது. 03▶

## இரண்டு சகோதரர்கள் வெட்டிப் படுகொலை!

### கிராண்ட்பாஸில் பயங்கரம்

கொழும்பு, கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெஹெரகொடெல்ல பகுதியில் இருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

23 மற்றும் 24 வயதுகளுடைய இரண்டு சகோதரர்களே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர்.

இன்று அதிகாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இரண்டு தரப்பினருக்கிடையில் ஏற்பட்ட தகராறு காரணமாக இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸாரின் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

தாக்குதலில் படுகாயமடைந்த இரண்டு சகோதரர்களும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். 03▶

VOTE 2025இல் உள்ளூர் ஆட்சி யாரிடம்?

# முல்லைத்தீவில் ஆயிரக்கணக்கான ரி - 56 ரக துப்பாக்கி ரவைகள் மீட்பு!

(பா.சதீசன்)

முல்லைத்தீவு, சிலாவத்தை - தியோ நகர் காட்டுப் பகுதியில் ஆயிரக்கணக்கான வெடிக்காத துப்பாக்கி ரவைகள் முல்லைத்தீவு பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

தியோநகர் காட்டுப் பகுதியில் சந்தேகத்துக்கிடமான பொருட்கள் இருப்பதாகக் கடற்படையினருக்குத் தகவல் கிடைக்கப் பெற்றிருந்தது. அதனையடுத்து கடற்படையினரும், முல்லைத்தீவு பொலிஸாரும் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று சோதனை செய்து பார்த்தபோது அங்கு ரி - 56 ரக துப்பாக்கி ரவைகள் இருப்பது அவதானிக்கப்பட்டிருந்தது.

சந்தேகத்துக்கிடமான வகையில் மீட்கப்பட்ட உரப் பையில் இருந்து ரி - 56 ரக துப்பாக்கி ரவைகள் 1400 வெடிக்காத நிலையில் மீட்கப்பட்டன.

அந்தத் துப்பாக்கி ரவைகளை முல்லைத்தீவு பொலிஸார் மீட்டெடுத்து பாலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முல்லைத்தீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# முல்லைத்தீவு விபத்தில் யாழ். இளைஞர் மரணம்

முல்லைத்தீவில் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நாவாந்துறை பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ். நாவாந்துறை பகுதியைச் சேர்ந்த குணசிங்கம் மதுசன் (வயது 28) என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவில் கடந்த 12ஆம் திகதி இரவு இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்த மேற்படி இளைஞர், முல்லைத்தீவு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்.

இந்தநிலையில், நேற்று வெள்ளிக்கிழமை மேற்படி இளைஞர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

# லொறி - மோ. சைக்கிள் விபத்து! குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழப்பு!!

(க.மகாதேவன்)

வாரியபொல - புத்தளம் வீதியின் பலாபத்வல பிரதேசத்தில் நேற்று இரவு இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று வாரியபொல பொலிஸார் தெரிவித்தனர்.

வாரியபொலவில் இருந்து புத்தளம் நோக்கிப் பயணித்த லொறி ஒன்று வீதிக்கு அருகில் நிறுத்தப்பட்டபோது, அதே திசையில் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று லொறிக்குப் பின்னால் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.



இந்தச் சம்பவத்தில் காயமடைந்த மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் வாரியபொல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

விபத்தில் 44 வயதுடைய வீதிகுளிய பகுதியைச் சேர்ந்த ஒருவரே உயிரிழந்துள்ளார்.

சடலம் வாரியபொல வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்து தொடர்பில் லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதோடு, வாரியபொல பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**இசைப்பிரியாவுக்கு...**

பெண் வைத்தியர் ஒருவர் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டமையை நாமும் வன்மையாகக் கண்டிக்கின்றோம். அதேவேளை, இராணுவத்தினரால் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்ட எமது தமிழ் பெண்களுக்கான நீதி எங்கே?

இது தொடர்பில் இந்த அரசின் நடவடிக்கைதான் என்ன? இசைப்பிரியாவுக்கு நீதி கிடைக்குமா?" - என்று சாணக்கியன் எம்.பி. மேலும் உரையாற்றினார்.

அவரின் இன்றைய நாடாளுமன்ற உரை காணொளியாக இணைக்கப்பட்டுள்ளது.

**தமிழ்க் காங்கிரஸ்...**

இந்த இணைவு என்பது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கொள்கைகளை முழுமையாக ஏற்றுக்கொண்டதன் அடிப்படையில் ஏற்பட்டுள்ளது எனவும், மக்களின் எதிர்கால நோக்கத்தின் அடிப்படையிலான காலத்தின் கட்டாயமாக இந்த இணைவு காணப்படுகின்றது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதன்போது நாவலன் மேலும் தெரிவிக்கையில்,

"தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் தலைமையில் இன்று பல கட்சிகள் இணைந்துள்ளன. அதன் ஓர் அங்கமாக ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசாவின் வழிநடத்தலில் ஜனநாயகத் தமிழரசுக் கட்சி இந்தக் கூட்டணியில் இணைந்து எமது தமிழ் மக்களின் தீர்வுக்காகவும், மக்களின் அடிப்படைத் தேவை மற்றும் பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் முகமாகவும் செயற்படவுள்ளது.

இந்த நோக்கத்துக்காக ஏனைய கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும் என்ற கோரிக்கையை விடுக்கின்றோம்.

சிங்களப் பேரினவாதத்தின் ஒற்றர்களால் தமிழினத்தின் அரசியல் கேள்விக்குறியாக உள்ளது. இந்த விடயத்தை மக்கள் உணர்ந்து செயற்பட வேண்டிய காலத்தின் கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

இந்தக் கூட்டணியில் ஜனநாயகத் தமிழரசுக் கட்சியுடன், தமிழ்த் தேசிய பசுமை இயக்கம், தமிழ்த் தேசியக் கட்சி மற்றும் தென்மராட்சியின் அருந்தவபாலன் தரப்பும் இணைந்துள்ள அதேவேளை மேலும் சில தமிழ்த் தேசிய அமைப்புக்கள் இந்தக் கூட்டணியில் இணையும் என எதிர்பார்க்கின்றோம்.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மக்களுக்குப் பழக்கப்பட்ட சின்னம் என்பதன் அடிப்படையிலும் மக்களுக்குக் குழப்பங்களை ஏற்படுத்தக்கூடாது என்ற காரணத்தின் அடிப்படையிலும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பெயர் மற்றும் சின்னத்தில் போட்டியிடவுள்ளோம்." - என்றார்.

### வவுனியாவின் 5 உள்ளூராட்சி சபைகளிலும் போட்டியிட

# கட்டுப்பணம் செலுத்தியது மஸ்தான் எம்.பியின் கங்காரு

**(கி.வசந்தன்)**

வவுனியா மாவட்டத்தின் 5 உள்ளூராட்சி சபைகளிலும் போட்டியிட வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தானின் இலங்கைத் தொழிலாளர் கட்சி வவுனியா மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகத்தில் கட்டுப்பணம் செலுத்தியது.



நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடும் கட்சிகள் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை கட்டுப்பணம் செலுத்த முடியும்.

அதற்கமைவாக, வவுனியா மாவட்டத்தின் வவுனியா மாநகர சபை, வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபை, வவுனியா வடக்கு பிரதேச சபை, வெண்கல செட்டிகுளம் பிரதேச சபை, வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபை ஆகிய ஐந்து உள்ளூராட்சி சபைகளிலும் இலங்கைத் தொழிலாளர் கட்சி கங்காரு சின்னத்தில் போட்டியிடவுள்ளது.

அதற்கான கட்டுப்பணத்தை கட்சி முக்கியஸ்தர்கள் வவுனியா மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள தேர்தல் அலுவலகத்தில் செலுத்தினர்.

# வவுனியாவில் ஐக்கிய மக்கள் சக்தி கட்டுப்பணம்





**(கி.வசந்தன்)**

வவுனியா மாவட்டத்தின் 5 உள்ளூராட்சி சபைகளிலும் போட்டியிட ஐக்கிய மக்கள் சக்தி இன்று வவுனியா மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகத்தில் கட்டுப்பணம் செலுத்தியது.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடும் கட்சிகள் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை கட்டுப்பணம் செலுத்த முடியும்.

அதற்கமைவாக, வவுனியா மாவட்டத்தின் வவுனியா மாநகர சபை, வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, வவுனியா வடக்கு பிரதேச சபை, வெண்கல செட்டிகுளம் பிரதேச சபை, வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபை ஆகிய ஐந்து உள்ளூராட்சி சபைகளிலும் ஐக்கிய மக்கள் சக்தி ரெலிபோன் சின்னத்தில் போட்டியிடவுள்ளது.

அதற்கான கட்டுப்பணத்தை ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் பிரதி தவிசாளருமான முத்து முகமது, முன்னாள் நகர சபை உறுப்பினர்களான அப்துல் பாரி, லரீப், ஐக்கிய மக்கள் சக்தியின் மாவட்ட அமைப்பாளர் ரசிக்கா பிரியதர்சினி உள்ளடங்கிய கட்சி முக்கியஸ்தர்கள் செலுத்தியிருந்தனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**பிரதான...**

கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த பிரதான சந்தேக நபரான முன்னாள் இராணுவச் சிப்பாய் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அவர் இன்று அனுராதபுரம் நீதிவான் நீதிமன்றத்தில் பிரசன்னப்படுத்தப்பட்டதை அடுத்து அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

எதிர்வரும் 17ஆம் திகதி சந்தேக நபரை அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்துமாறும் நீதிவான் இதன்போது உத்தரவிட்டுள்ளார்.

சந்தேகநபர், வசித்து வந்த கல்னேவ பகுதியில் உள்ள வீடு நேற்று சோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது அங்கிருந்து கைக்குண்டு ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது.

மேற்படி பெண் வைத்தியரின் கையடக்கத் தொலைபேசியைத் தேடுவதற்காகப் பிரதான சந்தேகநபரின் வீடு சோதனையிடப்பட்டபோதே இந்தக் கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளது.

எனினும், இதுவரையிலும் குறித்த தொலைபேசி கிடைக்கப்பெறவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, அனுராதபுரம் போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

அவருக்குப் பதிலாக பொலனறுவை வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் எச்.எம்.யு.ஐ கருணாரத்ன நேற்று நியமிக்கப்பட்டுள்ளார்.

சுகாதார அமைச்சின் செயலாளர் விசேட வைத்தியர் அனில் ஜாசிங்க வினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

**மட்டக்களப்பில்...**

காட்டுப் பகுதியில் ஆண் சிசு ஒன்று சடலமாகக் கிடப்பதைக் கண்ட பிரதேச மக்கள் பொலிஸாருக்கு உடனடியாகத் தகவல் வழங்கினர்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த சந்திவெளி பொலிஸார், சிசுவின் சடலத்தை மீட்டு அதைப் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

இந்த ஆண் சிசுவைப் பெற்றெடுத்த தாய், சிசுவை உரைப்பையில் கட்டி அதனை மொறக்கொட்டான் சேனை காட்டுப் பகுதியில் வீசிவிட்டுச் சென்றுள்ளார் என்று பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

மேலும், இந்த ஆண் சிசு சம்பவ தினத்தன்று பிறந்துள்ளது என்றும், சிசுவின் தாயைத் தேடும் பணியில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் சந்திவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைச் சந்திவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

**இரண்டு சகோதரர்கள்...**

சம்பவம் தொடர்பில் கிராண்ட்பாஸ் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# முஸ்லிம் தேசிய கூட்டமைப்பில் ஐக்கிய மக்கள் காங்கிரஸும்!

## இணைவதற்குப் பேச்சு என்கிறார் யஹ்யாகான்

(நூருல் ஹுதா உமர்)

முஸ்லிம் தேசிய கூட்டமைப்பு ஏற்படுமாயின் ஐக்கிய மக்கள் காங்கிரஸும் இணைவதற்கு தயாராக உள்ளது என்று கட்சியின் செயலாளர் நாயகம் ஏ.சி. யஹ்யாகான் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸ் தவிர்ந்த – ஏனைய அனைத்து முஸ்லிம் அரசியல் தலைவர்களுடனும் கூட்டமைப்பில் இணைவது குறித்துப் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை செய்து கொள்ள நாம் தயாராக உள்ளோம்.



முஸ்லிம் தேசிய கூட்டமைப்பு என்பது வரவேற்கத்தக்க ஒரு விடயம். இதை நாம் வரவேற்கிறோம். உள்ளூராட்சித் தேர்தலில் மட்டுமன்றி இனிவரும் அனைத்துத் தேர்தல்களிலும் இந்தக் கூட்டமைப்புப போட்டியிட வேண்டும்.

22 வருடங்களாகச் சமூகத்தை ஏமாற்றி – அபிவிருத்திகள் எதையும் செய்யாது – எம்பிக்களை உருவாக்கும் தொழிற்சாலையாக செயல்படும் கட்சி எமக்கு இனியும் வேண்டாம்.

தேர்தல் நெருங்கும் இந்தத் தருணத்தில் பொய்களையும் ஏமாற்றுக் கருத்துக்களையும் கொண்டுவரும் கட்சி தொடர்பில் மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்றும் யஹ்யாகான் கேட்டுக் கொண்டுள்ளார்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ஈழத் தமிழினத்துக்குப் பெருமை

கனடா நாட்டின் நீதி அமைச்சராகவும், சட்டமா அதிபராகவும் பூர்வீகக்குடிகள் விவகாரங்களுக்கான அமைச்சராகவும் கரி ஆனந்தசங்கரி நேற்றுப் பதவியேற்றிருக்கின்றார்.

இலங்கையின் யாழ்ப்பாணத்தின் பிறந்து, தனது சிறுவயதை இந்த மண்ணிலேயே கழித்த நமது இனத்தின் தோன்றலாகிய கரி ஆனந்தசங்கரிக்கு வழங்கப்பட்டுள்ள இந்த கௌரவம் அவருக்குரியதானது மட்டுமல்ல, இலங்கையின் ஒட்டு மொத்தத் தமிழ்த் தேசிய இனத்திற்கும் சர்வதேச ரீதியில் வழங்கப்பட்ட ஒரு கௌரவமும் அங்கீகாரமும் கூட.

ராஜபக்ஷக்களின் காலத்தில் தமிழர்களின்விடுதலைப்போராட்டத்தைப் பயங்கரவாதமாகச் சித்திரித்த போக்குக்கு மத்தியில், ஈழத் தமிழர்களுக்காக கனடா போன்ற நாடுகளில் இருந்து குரல் எழுப்பிய தமிழ்த் தேசிய சமூகத்தினரை பயங்கரவாதிகளாக வர்த்தமானியில் பட்டியலிட்டு அறிவிக்கும் கீழ்த்தரமான - சின்னத்தனமான - நடத்தையை ஸ்ரீலங்கா அரசு வெளிப்படுத்தியது.

அத்தகைய ஈழத் தமிழர்களின் கனடா சமுதாயத்திலிருந்து முகிழ்ந்த ஒருவருக்கு அந்த நாடு இன்று நீதி அமைச்சர் மற்றும் சட்ட மா அதிபர் பதவிகளை வழங்கியதன் மூலம் கொழும்பின் பௌத்த - சிங்கள பேரினவாத சிந்தனைப் போக்குக்கு சம்மட்டியடி கொடுத்திருக்கின்றது என்றால் அது மிகையல்ல.

அந்தக் கனடா நாட்டையும் அந்த மக்களையும் ஈழத் தேசிய எழுச்சியில் கரிசனை கொண்ட மக்கள் கௌரவத்தோடும் மரியாதையோடும் போற்ற வேண்டிய ஒரு நடவடிக்கையாக இது அமைகிறது.

பயங்கரவாதிகளாகக் கொழும்பினால் அடையாளப்படுத்தப்பட்ட ஒரு சமுதாயத்தின் பிரதிநிதி மேற்குலகில் உயர்ந்த ஒரு தேசத்தின் சட்டமா அதிபராகவும் நீதி அமைச்சராகவும் நியமனம் பெற்றமை - அதுவும் ஈழத் தமிழ்த் தேச மக்களின் விடுதலைக்கும் வாழ்வுக்குமாக அயராது குரல் எழுப்பும் அந்த மக்கள் கூட்டத்திலிருந்து வந்த ஒருவருக்கு நாட்டின் நீதித்துறை முடிவுகளை எடுக்கும் அந்த உயரிய அந்தஸ்தை வழங்கியமை - ஈழத் தமிழ் மக்களுக்கான பெருமிதமன்றி வேறு யாது?

1973 ஆம் ஆண்டு பிறந்த கரி ஆனந்த சங்கரி இலங்கையில் நிலவிய உள்நாட்டு யுத்த சூழ்நிலையை அடுத்து, தனது 13ஆவது வயதில் புலம்பெயர்ந்து கனடா சென்றார்.

சிறுவயது முதலே நமது மண்ணின் பல்வேறு வலிகளைச் சுமந்து, யாழ்ப்பாண மண்வாசனையில் வளர்ந்து, 1983 கறுப்பு ஜூலை கலவரத்தின் உச்ச வலிகளை நேரடியாக எதிர் கொண்ட வண்ணம் கனடா தேசத்தை அரவணைத்துக் கொண்ட ஓர் ஆளுமை இன்று அந்தத் தேச மண்ணில் வேர் பரப்பி, ஆலமரமாக வளர்ந்து, தேசத்தின் நீதி மற்றும் சட்டத்துறையின் உச்ச நிலையை அலங்கரிக்க முடிந்திருப்பது ஈழத் தமிழர்கள் ஒவ்வொருவருக்கும் பெருமையும் மட்டில்லா மகிழ்ச்சியும் தருவதாகும்.

தேசங்கள் கடந்தாலும் 'யாதும் ஊரே யாவரும் கேளீர்' என்ற வாக்கிற்கிணங்க பாரபட்சமற்று எல்லோரையும் அரவணைத்து, அனைத்துத் தரப்பினரதும் நீதிக்காகவும் செயலாற்றும் மாண்பும் மனிதாபிமானமும் தமிழனுக்கு உரியது. அதுவே ஈழத் தமிழ்த் தாய்க்கு இந்த நியமனம் மூலம் இந்த உயர்ந்த அங்கீகாரத்தை வழங்கியுள்ளது.

இன, மத பேதமற்று அனைத்து கனேடிய மக்களின் மனங்களை வென்றவராக அவரால் மிளிர முடிந்திருக்கின்றது என்பது இந்த சிந்தனைப் போக்கிலிருந்து மிளிர்ந்ததுதான்.

தமிழ்த் தேசத்துக்கு - தேசியத்துக்கு - அயராது குரல் எழுப்பும் ஓர் உயர்ந்த ஈழத் தமிழ் சகோதரனுக்குக் கிடைத்த இந்த உயரிய பதவி தமிழினத்துக்கே கிடைத்த விருதும் கூட.





# சம்மாந்துறையில் நோன்பு கால உணவுப் பாதுகாப்பு நடவடிக்கை

(பாறுக் ஷிஹான்)

சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில் தொடர்ச்சியாக சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஸஹீலா இஸ்ஸதீன் ஆலோசனையின் பிரகாரம் சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.எம். நௌசாத் வழிகாட்டலில் மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் உட்பட பொதுச்சுகாதார பரிசோதகர்கள் உரிய நடவடிக்கைகள் எடுத்து வருகின்றனர்.

இதற்கமைய தற்போதைய நோன்புக் காலத்தை முன்னிட்டு உணவுப் பாதுகாப்பின் நிமிர்த்தம் சில உணவு விற்பனை நிலையங்கள் அடையாளம் காணப்பட்டு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதன்போது காலாவதியான மற்றும் மனித பாவனைக்கு உதவாத சில உணவுப் பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

பின்னர் சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றில் சட்ட நடவடிக்கைக்காக உட்படுத்தப்பட்டு 10000 ரூபா தண்டப் பணம் அறவிடப்பட்டது.

சந்தேகத்துக்கு இடமான மங்கோ யூஸ் வகைகள், ஒரு வகை நூடில்ஸ் மற்றும் தேங்காய் எண்ணெய் போன்றன அதன் உள்ளடக்கத்தை அறிய அரச பகுப்பாய்வு திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

இது தவிர நோன்பு கால உணவுப் பாதுகாப்பு நடவடிக்கையின் ஒரு கட்டமாக இப்தாருக்கான சிற்றுண்டி உற்பத்தி செய்யப்படும் இடம், பல சரக்க கடைகள் என்பன பரிசோதிக்கப்பட்டன. கியூ.ஆர். முறை மூலம் செய்யப்பட்ட முறைப்பாடும் விசாரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.






# செங்கலடி பாரதிபுரம் மாணிக்கப் பிள்ளையார் அறநெறி மாணவிகள் நடனத்தில் சாதனை!

(பழுவூரான்)

மட்டக்களப்பு செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட ஏறாவூர் பற்று செங்கலடி ஐயங்கேணி பாரதிபுரம், ஸ்ரீ ஆதி மாணிக்கப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலை மாணவிகள் தேசியமட்ட நடனப் போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளனர்.

இந்து சமய கலாசார அலுவலக திணைக்களம் ஒழுங்கு செய்து நடத்திய தேசிய மட்ட ஆக்க திறன் விருது போட்டி 2024 இல் குழு நடனப் போட்டியில் தேசிய மட்டத்தில் மூன்றாம் இடத்தைப் பெற்று பெருமை சேர்த்துள்ளனர்.

இந்த மாணவிகளை அறநெறிப் பாடசாலையின் பொறுப்பாசிரியர் சிவஸ்ரீ க.சுவர்ணேஸ்வரனின் வழிகாட்டலுடன் அறநெறிப் பாடசாலை ஆசிரியர் செல்வி நிதாயினி கந்தசாமி நெறிப்படுத்தியிருந்தார்.

தேசிய மட்ட நடனப் போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்று இம்மாணவிகள் கிராமத்துக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.



# அரச உத்தியோகத்தருக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

(ஹஸ்பர் ஏ.எச்)

தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் தேசிய ரீதியில் இரண்டாம் மொழி சிங்களப் பயிற்சி பாடநெறியை நிறைவு செய்த 35 அரச உத்தியோகத்தருக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கொழும்பில் உள்ள தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் இடம் பெற்றது.




# உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் பொதுப் போக்குவரத்து சட்டத்தை கலந்தாய்வு





(பாறுக் ஷிஹான்)

கல்முனை தலைமை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் பொதுப் போக்குவரத்துக்கு இடையூறு செய்பவர்கள் உட்பட அதிக ஒளி மற்றும் ஒலி எழுப்பும் மோட்டார் சைக்கிள் பயன்படுத்தும் நபர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப் படவுள்ளது.

கல்முனை தலைமையகப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புறநகர் பகுதிகளில் ஏற்பட்டுள்ள வீதிப் போக்குவரத்து சீர்கேடு கலாச்சார சீர்கேடு உள்ளிட்டவைகள் தொடர்பான முறைப்பாடுகள் மற்றும் சட்டத்தை உரிய முறையில் அமுல்படுத்துவது தொடர்பிலான கலந்துரையாடல் கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் இப்னு அசார் பங்கேற்புடன் ஆரம்பமானது.

இதன்போது கல்முனை தலைமையக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.ரம்சீன் பக்கீர், சமூகப் பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரியும் பிரதம பொலிஸ் பரிசோதகருமான ஏ.எல்.ஏ.வாஹிட், கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவு பொறுப்பதிகாரியும் பிரதம பொலிஸ் பரிசோதகருமான பி.ரி. நஸீர், உட்பட கல்முனை மாநகர பகுதியில் உள்ள அம்மன் கோயில் வீதி, ஆர். கே. எம். வீதி , உடையார் வீதி, பொதுமக்கள், சிவில் பாதுகாப்பு அங்கத்தவர்கள், வர்த்தக உரிமையாளர்கள், பிரத்தியேக வகுப்பு உரிமையாளர்கள் கலந்து கொண்டனர்.

இதன் போது மோட்டார் சைக்கிள் மற்றும் ஓட்டோவில் பிரத்தியேக வகுப்புகள் ஆரம்பிக்கும் போது அல்லது முடிவடையும் போது பெண் பிள்ளைகளுக்கு தொந்தரவு செய்யும் நபர்கள் பற்றிய தகவல்கள் தெரிந்தால் பொலிஸ் நிலையத்துக்கு வழங்கவுமாறும் குறித்த விடயம் தொடர்பில் தகவல் தருபவரின் இரகசியம் பாதுகாக்கப்படும் என்றும் இந்தக் கலந்துரையாடலில் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன் அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் அண்மைக் காலமாக மோட்டார் சைக்கிள்கள் திருடுதல், பொதுப் போக்குவரத்தைச் சீர்குலைத்தல், சட்ட விரோதமாக பொதுப் போக்குவரத்துக்குப் பங்கம் விளைவித்தல், தான்தோன்றித்தனமாக வாகன தரிப்பு செய்தல், வர்த்தக நிலையங்களின் விளம்பரப் பலகைகளை பிரதான வீதியின் நடைபாதையில் காட்சிப்படுத்துவதை தவிர்த்தல், சட்டவிரோதமாகக் குப்பைகளைக் கொட்டுதல், கல்முனை மாநகரப் பகுதியில் மீண்டும் வழமை போன்று ஒரு வழிப்பாதையை உருவாக்குதல், நீர் தங்கி காணப்படும் வீதிகளை இனங்கண்டு சீர் செய்தல், கலாச்சார சீரழிவுகளை தடுப்பத்கான பொறிமுறைகள், கட்டாக்காலி மாடுகள், நாய்களைக்கட்டுப்படுத்தல் உள்ளிட்டவைகள் இந்தக் கலந்துரையாடலில் ஆராயப் பட்டன.

பல்வேறு திருட்டுச் சம்பவம் மற்றும் கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் பற்றிய தகவல் தெரிந்தால் பொலிஸ் நிலையத்துக்கு வழங்கவுமாறும் குறித்த விடயம் தொடர்பில் தகவல் தருபவரின் இரகசியம் பாதுகாக்கப்படும் என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.




EVEREST
FURNITURE
MODERN FURNITURE
FOR YOUR HOME



(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ MIX 1C1 SCARBOROUGH, CANADA





# இலங்கை இரசாயனவியல் ஒலிம்பியாட்; மல்வத்தை மாணவி ஜினோதிகா சாதனை!

(வி.ரி.சகாதேவராஜா)

இலங்கை கனிஷ்ட இரசாயனவியல் ஒலிம்பியாட் போட்டியில் கிழக்கு மாகாணத்தில் இருந்து சம்மாந்துறை வலய மல்வத்தை விபுலானந்த தேசிய பாடசாலை மாணவி சிவரூபன் ஜினோதிகா சாதனை படைத்துள்ளார் .

அவர் இந்தத் தேசியப் போட்டியில் மூன்றாவது இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் இருந்து மாணவி ஜினோதிகா மாத்திரமே தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் மல்வத்தை விபுலானந்த தேசிய பாடசாலையில் தரம் 11 இல் கல்விகற்று வருகிறார். இவர் மல்வத்தை திருவள்ளுவர்புரம் சிவரூபன் பிரபாஜினி தம்பதியினரின் மூத்த புதல்வியாவார்.

இலங்கை இரசாயனவியல் மன்றம் வருடாந்த பாடசாலை மாணவர்களிடையே மீட்திறன் கூடிய மாணவர்களுக்கு தேசிய இரசாயனவியல் ஒலிம்பியாட் போட்டியை நடத்தி வருகின்றது.

இந்த முறை முதல் தடவையாக 17 வயதுக்கு உட்பட்ட மாணவர்களுக்கு கனிஷ்ட இரசாயனவியல் ஒலிம்பியாட் போட்டியை கடந்த ஜனவரியில் நடத்தியது.

நாடளாவிய ரீதியில் 8 நிலையங்களில் நடத்திய போட்டியில் 293 மாணவர்கள் தோற்றியிருந்தார்கள்.

கிழக்கில் இருந்து 8 மாணவர்கள் கிழக்கு பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் தோற்றிருந்தார்கள.

போட்டியில் மாணவி ஜினோதிகா மாத்திரமே தேசிய ரீதியில் மூன்றாவது இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளார்.

இவர்களுக்கான சான்றிதழ்கள் பதக்கங்கள் எதிர்வரும் ஜூன் மாதம் கொழும்பில் வைத்து வழங்கப்படஇருக்கின்றது என்று இரசாயனவியல் மன்றம் அறிவித்துள்ளது.

மாணவி சிவரூபன் ஜினோதிகாவை சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். மகேந்திரகுமார் மற்றும் கல்விச் சமூகத்தினர் பாராட்டி வருகிறனர்.

இவர் ஏற்கனவே தேசிய கணித, விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டிகளில் பல பதக்கங்களை பெற்று சாதனை படைத்து வருவது குறிப்பிடத்தக்கது.



# ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் புத்தளத்தில் கட்டுப்பணம் செலுத்தியது

(கற்பிட்டி எம். எச். எம். சியாஜ்)

புத்தளம் மாவட்டத்தில் புத்தளம் மாநகர சபை, கற்பிட்டி பிரதேச சபை, வண்ணாத்திவில்லு பிரதேச சபை மற்றும் புத்தளம் பிரதேச சபை ஆகிய 04 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களிலும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி மரச் சின்னத்தில் தனித்து போட்டியிட தீர்மானித்துள்ளது.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸில் புத்தளம் மாநகர சபை தேர்தலில் தலைமை வேட்பாளராக போட்டியிடும் ரணீஸ் பதூர்தீன் புத்தளம் மாவட்ட செயலகத்தில் இதற்கான கட்டுப்பணத்தைச் செலுத்தினார்.

நான்கு உள்ளூராட்சி சபைகளிலும் மிகவும் பலம் வாய்ந்த அணியாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் அணி அமையலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.





# உதவித் தெரிவத்தாட்சி அலுவலருக்கு திருமலையில் பயிற்சிச் செயலமர்வு

(ஹஸ்பர் ஏ.எச்.)

2025 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் கையளிக்கும் நடவடிக்கைகள் மார்ச் மாதம் 17 முதல் 20 ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை திருகோணமலை மாவட்ட செயலக புதிய ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதற்கான பயிற்சி செயலமர்வானது உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு திருகோணமலை மாவட்ட அரச அதிபர் டபிள்யூ.ஜி.எம். ஹேமந்த குமார தலைமையில் மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தலில் திருகோணமலையில் அமைந்துள்ள விபுலானந்த கல்லூரியில் வாக்கெண்ணல் நடைபெற்றது.

இம்முறை, உள்ளூராட்சி மன்ற தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் 321 வாக்களிப்பு நிலையங்களில் 129 நிலையங்களில் வாக்கெண்ணல் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் பயிற்சிச் செயலமர்வில் திருகோணமலை மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் எஸ். கே. டி. நிரஞ்சன் மற்றும் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





# திருக்கோவிலில் நடைபெற்ற சர்வதேச மகளிர் தின விழா

(வி.ரி. சகாதேவராஜா)

திருக்கோவில் சுவாட் நிறுவனத்தின் ஏற்பாட்டில் நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் க.பிறேமலதன் தலைமையில் திருக்கோவில் சுவாட் நிறுவனத்தின் அலுவலக மண்டபத்தில் சர்வதேச மகளீர் தின நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக திருக்கோவில் பிரதேச செயலாளர் த.கஜேந்திரன், சிறப்பு அதிதிகளாக திருக்கோவில் பிரதேசத்தின் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, திருக்கோவில் பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர்களான பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர், உளவளத்துணை உத்தியோகத்தர், சமூர்த்தி முகாமையாளர் மற்றும் திருக்கோவில் பொலிஸ் நிலையத்தின் பெண்கள் மற்றும் சிறுவர் பிரிவின் பொறுப்பதிகாரி, சுவாட் நிறுவனத்தின் தலைவியும், ஓய்வு நிலை உதவிக்கல்விப்பணிப்பாளருமான கமலாதேவி, ஓய்வு நிலை கிராம சேவகர்களின் நிர்வாக உத்தியோகத்தர் க.இராசரெட்ணம், சுவாட் நிறுவனத்தின் ஆளுநர் சபை உறுப்பினரும், ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளருமான எஸ்.ரவீந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் மாணவர்களின் கலை கலாசார நிகழ்ச்சிகளும், அதிதிகளின் உரைகளும், சுவாட் நிறுவனத்தில் அதிக சேமிப்பு பணத்தைச் சேமித்த அங்கத்தவர்களையும், சிறந்த குழுத் தலைவிகளையும் கௌரவித்து பரிசில்கள் வழங்கும் நிகழ்வுகளும் நடைபெற்றன. இந்த நிகழ்வுக்கு அதிதியாகவும், பிரதம அதிதியாகவும் கலந்து கொண்டவர்களும் கௌரவிக்கப்பட்டனர்.





# சட்ட விரோதமாக கொண்டு வரப்பட்ட தேக்ககுமரப் பலகைகள் பறிமுதல்

(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)

சம்மாந்துறை பொலிஸார் சட்ட விரோதமாக கொண்டு வரப்பட்ட தேக் குமரப் பலகைகளையும், அவற்றை ஏற்றி வந்த வாகனத்தையும் கைப்பற்றி யுள்ளனர்.

இந்தச் சம்பவம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட முகைதீன் மாவத்தை பகுதியில் நடைபெறவுள்ளது.

அனுமதிப்பத்திரம் இல்லாமல் சட்டவிரோதமாக வாகனம் ஒன்றில் கொண்டு வரப்பட்ட ஒரு தொகை தேக்கு மரப் பலகைகளை சம்மாந்துறை பொலி ஸார் கைப்பற்றியுள்ளனர்.

சம்மாந்துறை பொலிஸாருக்கு கிடைத்த தகவல்களின் அடிப்படை யில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த தேக்கமரப் பலகைகளை கடத்துவதற்கு பயன்படுத் திய வாகனத்தையும் சம்மாந்துறை பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய சம் மாந்துறை 03 பகுதியைச் சேர்ந்த 20 வயது மதிக்கத்தக்க சந்தேக நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சம்மாந்துறை பொலிஸ் பெருங் குற்றப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையிலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்று சம்மாந்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

சம்மாந்துறை பொலிஸாரின் இந் நடவடிக்கையானது கல்முனை பிராந் திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் இப்னு அசாரின் பணிப்புரைக்கமைய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி



கே.டி.எஸ் ஜெயலதின் அறிவுறுத்தலுக் கமைய பொலிஸ் நிலைய பெருங்குற் றப்பிரிவு பொறுப்பதிகாரி கே.சதீஸ்கரின் வழிகாட்டலில், உப பொலிஸ் பரிசோதகர் ஏ.நசார் தலைமையிலான பொலிஸ் குழுவினரால் மேற்கொள்ளப்பட்டது.



# பழுதடைந்த பழங்கள் விற்றோருக்கு 50 ஆயிரம் ரூபா தண்டம் விதிப்பு!

(பாறுக் ஷிஹான்)

மனித பாவனைக்கு உதவாத சுகா தாரமற்ற பழுதடைந்த பழங்களை விற்பனை செய்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு 5 விற்பனை நிலையங்களுக்கு 50 ஆயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்த உத்தரவிடப்பட்டது.

பழுதடைந்த பழ விற்பனை தொடர் பாக வாடிக்கையாளர் ஒருவர் மேற் கொண்ட முறைப்பாட்டையடுத்து சம்மாந் துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட புறநகர் பகுதிகள் மற்றும் அடையாளம் காணப்பட்ட சில பழ விற்பனை நிலையங்களில் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது பழுதடைந்த பழங்களை விற்பனை செய்த கடை அடையாளம் காணப்பட்டு பரிசோதனை செய்த போது பல பழுதடைந்த பழங்கள் மீட்கப்பட்டன.

கடந்த வியாழக்கிழமை கைப்பற் றப்பட்ட மனித பாவனைக்கு உத வாத பொருளகளையும் சேர்த்து சம்மாந் துறை நீதவான் நீதிமன்றில் சட்ட நடவடிக்கைக்காக சமர்ப்பித்த வேளை, ஒரு கடைக்கு 20 ஆயிரம் ரூபா, இரண்டு கடைகளுக்குத் தலா 10 ஆயிரம் ரூபா, இரண்டு கடைகளுக்குத் தலா 5 ஆயிரம் ரூபா என மொத்தமாக 50 ஆயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்த உத்தரவிடப்பட்டது.

அத்துடன் பொதுமக்கள் தங்கள் உணவுப் பொருள்களை கொள்வனவு செய்யும் போது விழிப்பாக இருக்குமாறு சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

# தமிழக மீனவர்களின் பிரச்சினைக்கு தீர்வு கோரி வெளியுறவு துறை அமைச்சரிடம் நேரில் முறையீடு

டில்லியில் மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கரை சந்தித்த தமிழக மீனவர்களின் பிரதிநிதிகள், தங்களது பிரச்சினைகளுக்கு தீர்வுகாண வலியுறுத்தினர்.

அண்மைக்காலமாக இலங்கை கடற்படையால் தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுவது, படகுகள் பறிமுதல் செய்யப்படுவது அதிகரித்துள்ளதுடன், மீனவர்களுக்கு சிறை தண்டனை மற்றும் அதிக அபராதம் விதிக்கப்படுகிறது. இது தமிழக மீனவர்களிடையே அச்சத்தையும், பதற்றத்தையும் ஏற்படுத்தி உள்ளது. கடந்த 2 மாதங்களில் மட்டும் 19 படகுகள் இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டு, 145 தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை தலைமையில், ராமநாதபுரம், தஞ்சாவூர், நாகை, காரைக்கால் மாவட்ட மீனவப் பிரதிநிதிகள் டில்லி சென்றனர். மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கரை, மீனவர்கள் சங்கப் பிரதிநிதிகள் சேசுராஜா, எமிரிட், அன்பழகன், சின்னதம்பி உள்ளிட்ட 20 இற்கும் மேற்பட்டோர் நேற்று முன்தினம் மாலை சந்தித்துப் பேசினர்.

இலங்கை கடற்படையால் மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து விவரித்ததுடன், கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்து வரும் பிரச்சினைகளுக்கு மத்திய அரசு நிரந்தரத் தீர்வுகாண வேண்டும் என்று வலியுறுத்தினர்.

மேலும், இலங்கை கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட



படகுகளையும், கைது செய்யப்பட்ட மீனவர்களையும் நிபந்தனையின்றி விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். படகுகளை இழந்த மீனவர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும். இரு நாட்டு மீனவப் பிரதிநிதிகள் பேச்சுவார்த்தை நடத்த ஏற்பாடு செய்து, பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாண வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுப்பதாக வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் உறுதி அளித்தார்.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் பிரதமர் மோடி இலங்கை செல்ல உள்ள நிலையில், மீனவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழக மீனவப் பிரதிநிதிகள், வெளியுறவுத் துறை அமைச்சரை நேரில் சந்தித்து கோரிக்கை விடுத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# ஹோலி ஊர்வலத்தில் மோதல்; வாகனங்கள், கடைகளுக்கு தீ வைப்பு

ஜார்க்கண்ட் மாநிலம் கிரிதிஹ் மாவட்டத்தில் நடந்த ஹோலி கொண்டாட்ட ஊர்வலத்தில் இரண்டு சமூகத்துக்கு இடையே ஏற்பட்ட மோதலில் பல வாகனங்கள் தீ வைத்து எரிக்கப்பட்டன என அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேலும் தற்போது நிலைமை கட்டுக்குள் இருப்பதாகவும், இதில் சம்மந்தப்பட்டவர்களை அடையாளம் காணும் விசாரணை நடந்து வருவதாகவும் தெரிவித்தனர்.

கிரிதிஹின் கோத்தம்பா சவுக்கில் உள்ள ஒரு குறுகலான தெரு வழியாக ஹோலி ஊர்லம் சென்ற போது இந்த மோதல் சம்பவம் ஏற்பட்டது. இரண்டு சமூகத்தினருக்கு இடையே ஏற்பட்ட வாக்குவாதம் மோதலாக மாறியது. சுமார் ஒரு மணிநேரம் இந்தக் குழப்பம் நீடித்தது. சம்பவம் குறித்து தகவல் கிடைத்ததும் அதிகாரிகள் அங்கு விரைந்து சென்று நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இந்தச் சம்பவம் குறித்து மாவட்ட எஸ்.பி. பிமல் கூறுகையில், “கோர்தம்பா தொகுதியில் வெள்ளிக்கிழமை நடந்த ஹோலி கொண்டாட்டத்தின் போது இரண்டு சமூகத்தினரிடையே மோதல் ஏற்பட்டது. இந்தச் மோதல் சம்பவத்தில் ஈடுபட்டவர்களை அடையாளம் காணும் பணி நடந்து வருகிறது. அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். நிலைமை தற்போது கட்டுப்பாட்டில் உள்ளது. மோதலில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை, சில வாகனங்கள் தீவைத்து எரிக்கப்பட்டுள்ளன” என்று தெரிவித்தார்.

# பூமி திரும்புகிறார் சுனிதா வில்லியம்ஸ்

## அழைத்து வரச் சென்றது விண்கலம்

சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு கடந்த வருடம் ஆய்வு பணிக்காக சுனிதா வில்லியம்ஸ் மற்றும் பேரி வில்மோர் ஆகியோர் சென்றிருந்தனர்.

ஒரு வார காலம் தங்கியிருந்து ஆய்வு பணிகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டு இருந்தது.

ஆனால் ஸ்டார்லைனர் விண்கலத்தில் தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டு இருவரும் பூமிக்கு திரும்ப முடியாத சூழல் ஏற்பட்டது.

கடந்த ஆண்டு செப்டம்பர் 7 ஆம் திகதி ஸ்டார்லைனர் விண்கலம், ஆட்கள் இன்றி வெறுமையாக பூமிக்கு திரும்பியது. 9 மாதங்களுக்கு பிறகு அமெரிக்க விண்வெளி வீரர்களை பூமிக்கு அழைத்து வர ஸ்பேஸ் எக்ஸ் மற்றும் நாசா நிறுவனம் இணைந்து விண்கலம் ஒன்றை அனுப்பி உள்ளது.

இந்த விண்கலம் இன்று அதிகாலை புறப்பட்டு சென்றது.



இந்த விண்கலம் இன்றிரவு 11.30 அளவில் சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு சென்றடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எதிர்வரும் 19 ஆம் திகதி வில்மோர் மற்றும் சுனிதா வில்லயம்ஸ் இருவரும் இந்த விண்கலத்தில் பூமிக்கு திரும்புவார்கள் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

# 41 நாடுகளின் பிரஜைகளுக்கு அமெரிக்கா செல்லத் தடை

## ட்ரம்ப்பின் அதிரடி தீர்மானம்

அமெரிக்காவின் டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகம் சட்டவிரோத குடியேற்றத்தை தடுப்பதற்காக கடுமையாக செயற்பட்டு வருகிறது .

இந்நிலையில் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், துர்க்மெனிஸ்தான் , பெலாரஸ் , பூட்டான் மற்றும் வனுவாட்டு உள்ளிட்ட 41 நாடுகளின் பிரஜைகளுக்கு அமெரிக்கா செல்ல தடை விதிக்க வாய்ப்புள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

பல்வேறு குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி இந்த தடை விதிக்க



வாய்ப்புள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளது.

அதன்படி,இந்த நாடுகளை மூன்று குழுக்களாக பிரித்து முதல் குழுவில் உள்ள நாட்டினரின் விசாவை முழுமையாக ரத்து செய்ய திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இரண்டாவது குழுவில் உள்ள நாடுகளுக்கு கட்டுப்பாடுகளுடன் கூடிய தடையை விதிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், மூன்றாவது குழுவில் உள்ள நாடுகளுக்கு சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு 60 நாள்கள் அவகாசம் வழங்கப்படும் எனவும் சர்வதேச ஊடகங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.



# காசாவில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 4 பேர் உயிரிழப்பு

காசாவின் சில பகுதிகளில் இஸ்ரேல் நடத்திய ஆளில்லா விமானத்தாக்குதலில் 4 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

அத்துடன், இந்த தாக்குதலில் பலர் காயமடைந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்தநிலையில், ஆக்கிரமிக்கப்பட்ட மேற்கு கரையிலுள்ள அகதிகள் முகாமில் இஸ்ரேலிய படைகள் தாக்குதல் நடத்தியுள்ளன என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, காசாவுக்கான மனிதாபிமான உதவிகளை இஸ்ரேல் நிறுத்தியதை அடுத்து அங்கு உணவு, எரிபொருள் உள்ளிட்ட பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

கனடா முரசு

சனிக்கிழமை 15/03/2025

## ஹெலிக்கொப்டர் படையை உருவாக்க கனடா தீர்மானம்

கனேடிய இராணுவம் புதிய ஹெலிக்கொப்டர் படையை உருவாக்க 18.4 பில்லியன் டொலர்களை செலவிட தீர்மானித்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

03



# கனடாவின் நீதி அமைச்சராக கரி ஆனந்தசங்கரி பதவியேற்றார்

**கனடா வரலாற்றில் முதல் முறையாக யாழ்ப்பாணத்தில் பிறந்தவரான கரி ஆனந்தசங்கரி நீதி அமைச்சராகப் பதவியேற்றுள்ளார்.**

**இலங்கையின் மூத்த தமிழ் அரசியல்வாதியான தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரியின் இளைய புதல்வரே கரி ஆனந்தசங்கரி ஆவார். இலங்கையில் காணப்பட்ட யுத்த சூழ் நிலையை அடுத்து, தனது 13 ஆவது வயதில் புலம் பெயர்ந்து அவர் கனடா சென்றார்.**

கனடாவில் தமிழ் இளைஞர்கள் மத்தியில் ஏற்படும் வன்முறைகளை தீர்த்து வைக்கும் வகையில், கனடாவில் இளைஞர்கள் சேவை நிலையமொன்றை அவர் ஆரம்பித்துள்ளார்.

கனடாவில் வாழ்கின்ற தமிழ் இளைஞர்களிடம் காணப்படும் முரண்பாடுகளை தீர்ப்பதற்காக முன்னின்று செயற்படுபவராக கரி ஆனந்தசங்கரி அந்த காலங்களில் திகழ்ந்துள்ளார்.

அத்தோடு, கனடா தமிழ்ச் சங்கத்தின் செயற்பாடுகளிலும் அவர் பெரும் பங்களிப்பை வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது, அத்துடன், கனேடிய தமிழ்க் காங்கிரஸ் அமைப்பின் வளர்ச்சிக்காகவும் அவர் முன்னின்று செயற்பட்டுள்ளார்.

இந்த நிலையில், கனடாவில் கடந்த 2019 ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் ஒன்டாரியோ மாகாணத்தில் ஸ்காபரோ ரூஜ்பார்க் தொகுதியில் பெரும்பான்மை வாக்கு வித்தியாசத்தில் இரண்டாவது முறையாக கரி ஆனந்தசங்கரி லிபரல் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராகியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், புதிதாக அமையப்பெற்ற கனடா அரசின் புதிய அமைச்சரவையில் , ஈழத்தை பூர்வீகமாகக் கொண்ட கரி ஆனந்தசங்கரி நீதியமைச்சராக தெரிவு செய்யப்பட்டதை அடுத்து, சத்தியப்பிரமாணம் செய்து பதவியை பொறுப்பேற்றுக்கொண்டார்.





# கனடாவின் புதிய பிரதமராக மார்க் கார்னி பதவியேற்றார்

கனடாவின் 24 ஆவது பிரதமராக மார்க் கார்னி பதவியேற்றுக் கொண்டார்.

கனடா நாட்டின் லிபரல் கட்சியின் அடுத்த தலைவராகவும், அந்நாட்டின் 24 ஆவது பிரதமராகவும் கனடா வங்கியின் முன்னாள் தலைவரான மார்க் கார்னி அண்மையில் தேர்வு செய்யப்பட்டார்.

கடந்த ஜனவரியில் தனது பிரதமர் பதவியை ஜஸ்டின் ட்ரூடோ இராஜினாமா செய்தார். இதனையடுத்து லிபரல் கட்சியின் தலைமை பதவிக்கான போட்டியில் மார்க் கார்னி 1,31,674 வாக்குகளைப் பெற்றார். இது மொத்த வாக்குகளில் சுமார் 85.9 சதவீத வாக்குகள் என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தேர்ந்தெடுக்கப்பட்டதிலிருந்து கனடா பொருளாதார மற்றும் அரசியல் பதட்டங்களை எதிர்கொண்டு வரும் காலகட்டத்தில் கார்னி பிரதமராக பதவியேற்றுள்ளார்.

மார்க் கார்னி கடந்த 2008 முதல் 2013 ஆம் ஆண்டு வரை கனடா வங்கியின் 8 ஆவது ஆளுநராக பணியாற்றியுள்ளார். மேலும், 2011 முதல் 2018 ஆம் ஆண்டு வரை நிதி நிலைத்தன்மை வாரிய தலைவராக இருந்துள்ளார்.

இந்நிலையில், முன்னாள் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவின் பதவி விலகலுக்குப் பிறகு, கார்னி கனடாவின் புதிய பிரதமராகப் பொறுப்பேற்றார். நேற்று வெள்ளிக்கிழமை ஒட்டாவாவின் ரைடோ ஹாலில் நடைபெற்ற பதவியேற்பு விழாவில், கார்னிக்கு ஆளுநர் ஜெனரல் மேரி சைமன் பிரதமர் பதவியை வழங்கினார். இந்த விழாவில், கார்னி தனது 23 உறுப்பினர்களைக் கொண்ட புதிய அமைச்சரவையை அறிமுகப்படுத்தினார். இது ட்ரூடோவின் அமைச்சரவையை விட குறைந்த உறுப்பினர்களைக் கொண்டது. ட்ரூடோவின் அமைச்சரவையில் 39 உறுப்பினர்கள்



இருந்தனர்.

புதிய அமைச்சரவை பட்டியல்:

01.மார்க் கார்னி - பிரதமர்

02.அனிதா ஆனந்த் - புதுமை, அறிவியல் மற்றும் தொழில்துறை அமைச்சர்

03.கரி அனந்தசங்கரி - கிரவுன் -இந்தியன் மற்றும் வடக்கு விவகாரங்களுக்கான அமைச்சர், நீதி அமைச்சர் மற்றும் கனடாவின் அட்டர்னி ஜெனரல்

ரேச்சல் பெண்டாயன் - குடியேற்றம், அகதிகள் மற்றும் குடியுரிமை அமைச்சர்

04.பில் பிளேர் - தேசிய பாதுகாப்பு அமைச்சர்

05.கோடி ப்ளோய்ஸ்- வேளாண்மை மற்றும் வேளாண்மை-உணவு மற்றும் கிராமப்புற பொருளாதார மேம்பாட்டு அமைச்சர்

06.எலிசபெத் பிரியர் - வெட்டரன்ஸ் விவகாரங்களுக்கான அமைச்சர் மற்றும் கனடா வருவாய் முகமையகத்துக்கான பொறுப்பு அமைச்சர்

07.பிரான்கோய்ஸ்-பிலிப் சாம்பேன் - நிதி அமைச்சர்

08.டெரி டுகுவிட் - சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சர்

09.அலி எஹ்ஸாஸ்ஸி - அரசாங்க மாற்றம், பொதுச் சேவைகள் மற்றும் கொள்முதல் அமைச்சர்

10.நாதனியல் எர்ஸ்கின்-ஸ்மித் - வீடுகள், உள்கட்டமைப்பு மற்றும் சமூகங்கள் அமைச்சர்

11.க்ரிஸ்டியா ஃப்ரீலேண்ட் - போக்குவரத்து மற்றும் உள் வர்த்தக அமைச்சர்

12.ஸ்டீவன் குயில்பால்ட் - கனடிய கலாச்சாரம் மற்றும் அடையாளம், பார்க்ஸ் கனடா மற்றும் கியூபெக் லெப்டினன்ட் அமைச்சர்

13.பட்டி ஹஜ்டு - இந்திய சேவைகள் அமைச்சர்

14.மெலனி ஜோலி - வெளியுறவு மற்றும் பன்னாட்டு மேம்பாட்டு அமைச்சர்

15.அரியேல் கயபாகா - அரசாங்க மாளிகைத் தலைவர் மற்றும் ஜனநாயக நிறுவனங்களுக்கான அமைச்சர்.

16.கமல் கேரா - சுகாதார அமைச்சர்

17.டொமினிக் லெப்லான்க் - பன்னாட்டு வர்த்தக மற்றும் அரசாங்கங்களுக்கிடையேயான விவகாரங்களுக்கான அமைச்சர் மற்றும் கனடாவின் கிங்ஸ் பிரிவி கவுன்சிலின் தலைவர்.

18.ஸ்டீவன் மெக்கினான் - வேலைவாய்ப்பு மற்றும் குடும்பங்கள் அமைச்சர்.

19.டேவிட் மெகுயின்டி - பொதுப் பாதுகாப்பு மற்றும் அவசர ஆயத்தங்களுக்கான அமைச்சர்.

20.ஜினெட் பெட்டிபாஸ்-டெய்லர் - டிரஸ்டி போர்டின் தலைவர்

21. ஜோவான் தாம்சன் - மீன்வளம், கடல்கள் மற்றும் கனடிய கடலோர பாதுகாப்புப் படை அமைச்சர்

22.ரெச்சி வால்டெஸ் - தலைமை அரசாங்க விரட்டும் அதிகாரி

23.ஜோனாதன் வில்கின்சன் - ஆற்றல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சர்

இந்த மாற்றங்கள், கனடாவின் தற்போதைய நெருக்கடிகளைச் சமாளிக்கும் வகையில் செயல்முறை-சார்ந்த அணுகுமுறையைக் கொண்டிருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.



# அமெரிக்காவின் ஒரு பகுதியாக ஒருபோதும் இருக்கப் போவதில்லை

## கனடா பிரதமர் மார்க் கார்னி உறுதி

அமெரிக்காவின் ஒரு பகுதியாக ஒருபோதும் இருக்கப் போவதில்லை என கனடாவின் புதிய பிரதமர் மார்க் கார்னி தெரிவித்துள்ளார்.

கனடாவின் புதிய பிரதமராக நேற்று பதவியேற்றுக் கொண்டதன் பின்னர் நிகழ்த்திய உரையில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவுக்கும் கனடாவுக்கும் இடையே இடம் பெறும் வர்த்தக போருக்கு மத்தியில் அவர் பிரதமராகப் பதவியேற்றுள்ளார்.

'மற்றுமொருவர் கொண்டு செல்ல முடியாத வகையில் நம்மை நாமே கட்டியெழுப்ப வேண்டும்" என்று கனடாவின் புதிய பிரதமர் தமது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம் காலநிலை மாற்றத்தை எதிர்த்துப் போராடுவதற்கு தமது அரசாங்கம் இன்னும் நடவடிக்கை எடுக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பிரதமராக பதவியேற்றதன் பின்னர் தமது முதலாவது சர்வதேச விஜயமாக அடுத்த வாரம், அவர் பிரித்தானியாவுக்கும் பிரான்ஸுக்கும் விஜயம் மேற்கொள்ளவுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.




## ஹெலிக்கொப்டர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கனேடிய விமானப்படை அதிகாரி, பிரித்தானியாவில் நடைபெற்ற சர்வதேச இராணுவ ஹெலிக்கொப்டர் மாநாட்டில் இப் புதிய அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

இந்த ஹெலிக்கொப்டர்கள், அமெரிக்க இராணுவத்துடன் இணைந்து செயற்பட பயன்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# ஆயுத முனையில் கொள்ளையில் ஈடுபட்ட ஒருவரை தேடும் பொலிஸ்

டொரன்டோவில் ஆயுத முனையில் கொள்ளைச் சம்பவங்களில் ஈடபட்ட நபர் ஒருவரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

இந்த சம்பவங்கள் கடந்த ஆண்டு டிசம்பர் 5 மற்றும் 11 ஆகிய திகதிகளுக்கிடையில் புளூர் ஸ்ட்ரீட் வெஸ்ட் மற்றும் ஒசிங்டன் அவென்யூ, புளூர் ஸ்ட்ரீட் ஈஸ்ட் மற்றும் ஷெர்போர்ன் ஸ்ட்ரீட், மற்றும் காலேஜ் ஸ்ட்ரீட் மற்றும் லான்ஸ்டோவ்ன் அவென்யூ ஆகிய பகுதிகளில் இடம்பெற்றுள்ளன.

மேற்படி நபர் கடைகளில் புகுந்து ஆயுத முனையில் பணத்தைக் கொள்ளையிட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

இரண்டு சந்தர்ப்பங்களில் அந்த சந்தேக நபரினால் பணத்தை கொள்ளையிட முடியவில்லை எனவும், ஒரு கடையில் பணம் கொள்ளையிடப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

கொள்ளையிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பது குறித்த தகவல்கள் வெளியிடப்படவில்லை.

சந்தேக நபர் 20 முதல் 30 வயதுக்குள், சுமார் 5 அடி 8 அங்குல உயரம் மற்றும் நடுத்தர உடல் கட்டியவர் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.



# அமெரிக்காவுக்கு செல்லும் கனடியர்களுக்கு கட்டுப்பாடு

அமெரிக்காவுக்குள் 30 நாள்களுக்கு மேல் தங்கும் கனேடியர்கள் கட்டாயமாக பதிவு செய்ய வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க அரசு பதிவேட்டில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. வட அமெரிக்க நாடுகளுக்கு உறவுகள் மோசமடையும் நிலையில், புதிய விதிமுறைகள் கடுமையாக்கப்படுகின்றன.

இந்த புதிய கட்டுப்பாடு ஏப்ரல் 11 முதல் அமலுக்கு வருகிறது. இதன் மூலம் ஏற்கனவே இருந்த சட்டம் கடுமையாக அமல்படுத்தப்படும்.

முன்னதாக இந்த சட்டத்திலிருந்து கனேடியர்கள் விலக்கு வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த புதிய நடைமுறையினால் “ஸ்னோபேர்ட்ஸ்” (Snowbirds) என அழைக்கப்படும் சுமார் 900,000 கனேடியர்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பொதுவாக குளிர்காலங்களில் அமெரிக்காவின் வெப்பமான தெற்கு மாநிலங்களான புளோரிடா, டெக்சாஸ், மற்றும் தெற்கு கரொலினா ஆகிய இடங்களில் கனடியர்கள் தங்கியிருப்பார்கள் புதிய நடைமுறையினால் கனடியர்களுக்கு பாதிப்பு ஏற்படக் கூடும் என தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஜனவரி மாதம் பதவியேற்றதிலிருந்து, இரு நாடுகளுக்கிடையிலான உறவுகள் தொடர்ந்து மோசமடைந்து செல்கின்றமை குறிப்பிடத்தக்கது.